16. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு (மக்களவையில் அறிமுகப் படுத்தப் பெற்றவாறு).

17. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு (நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

18. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான மக்களவை நடவடிக்கைகள்.

19. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான மாநிலங்களவை நடவடிக்கைகள்.

இணைப்பு I

[230 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 33-க்கான விடையைக் காண்க.]

1952 ஆம் ஆண்டின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் (E.P.F.Scheme, 1952) பத்தி 38-ல் கண்டுள்ளபடி அத்திட்டத்தின் விதிகளுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் அதிபர்கள் தங்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்த வருங்கால வைப்புநிதித் தொகையுடன் தங்களுடைய பங்குத் தொகையையும் சேர்த்து ஒவ்வொரு மாதமும் முடிவதற்கு 15 தினங்களுக்குள் வருங்கால வைப்புநிதி ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். ஏறக்குறைய 90 சதவிகிதம் தொழிலதிபர்கள் இவ்விதிகளுக்குட்பட்டு பணம் செலுத்தி வருவதாக வருங்கால வைப்புநிதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2. தேசியப் பஞ்சாலைக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப் பட்ட நெசவுத் தொழில் நிறுவனங்கள், முறையீட்டு மனுச் செய்து நிறுத்தி வைத்தல் ஆணை பெற்ற (ஸ்டே ஆர்டர்) நிறுவனங்கள், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள், மூடப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வரவேண்டிய நிலுவைக்காக வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உரிய சான்றிதழ்களுடன் மனுக்கள் செய்யப் பட்டுள்ளன. பிற நிறுவனங்களிடமிருந்து தொகைகளை வசூலிப்பதற்கு வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளரால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மற்றுமுள்ள நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகைகளுக்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு வருமானத் தண்டல் சான்றிதழ்கள் (ரெவின்யூ ரிகவரி சர்ட்டிபிகேட்ஸ்) அனுப்பப்பட்டு தொகைகளை நிலவரி நிலுவையாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பணம் செலுத்தத்தவறிய நிர்வாகிகள் மீது நீதி மன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.